# MIN ALAI

# மின் அலை

April 2025 Volume : 13 Issue 4 Price Rs. 18.00/- Ann. Sub. Rs. 216/-

**உழைப்பே உலகின் இயக்கு விசை!! வாரியம் வளம் பெற உழைத்திடும் அனைவருக்கும் உழைப்பாளர் தின வாழ்த்துக்கள்.**



குமரி முதல் தலைநகரம் வரை கள ஆய்வு மேற்கொண்டு, அதிகாரிகள் முதல் களப்பணியாளர்கள் வரை அனைவருடனும் கலந்து ஆலோசித்து, இடர்பாடுகளை கேட்டு அறிந்து உடனுக்குடன் தீர்வு கண்டு வாரியத்தை மேம்படுத்த முயலும் நமது வாரியத்தலைவர் மரு.J.இராதகிருஷ்ணன் IAS., அவர்கள் கொரட்டூர் 400 KV வளிம காப்பு துணை மின் நிலையத்தில் நடைபெற்று வரும் சோதனை ஓட்டப் பணிகளை நேரில் ஆய்வு செய்தார்.


**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**

பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொதுப் பொருளாளர் |
|---|---|---|
| பொர்.A.அந்தோணிபடோவராஜ் | பொர்.V.S.சம்பத்குமார் | பொர்.N.R.செந்தில் |

# தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் 2025 ஆண்டு கிளையின் பேரவை கூட்டங்கள்






தஞ்சாவூர்





திருவண்ணாமலை





ஈரோடு






வேலூர்

ஆசிரியர்
பொர்.உ.ராஜேந்திரன்
9092687454

ஆசிரியர் குழு
பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.N.R.செந்தில்
பொர்.S.செந்தில் முருகன்
பொர்.K.பிரபாகரன்
பொர்.S.அமர்நாத்

| Page | Contents |
|---|---|
| 07. | Our Representations |
| 09. | Board Order |
| 14. | பத்திரிக்கைச் செய்திகள் |
| 17. | போராடும் உத்திரபிரதேசப் பணியாளர்கள்..! |
| 18. | Know This Day - April 3rd |
| 19. | 2025 ஆம் ஆண்டுப் பேரவை கூட்டங்கள் |

**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9499014992**

# மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 13 ஏப்ரல் 2025 இதழ் 4

## மாற்றம்... மனோ நிலையில் மாற்றம்...

சமீபத்திய ஓர் சுற்றறிக்கை... சுய பரிசோதனை அறிக்கையாக வெளியாகி உள்ளது. பல புரியாத, கள சூழ்நிலைக்கு அல்லாத, நடைமுறைக்கு உதவாத சுற்றறிக்கைகள், தினமும் பல உத்தரவுகள்.... இதனை நித்தம் பார்த்து வந்த நமக்கு இது புதிது...

சிறப்பான கண்ணோட்டம், சீர்மிகு சிந்தனைகள், அரவணைத்து செல்லும் மாண்பு, வெளிப்படையான ஆலோசனை, ஏற்றத்தாழ்வு அற்ற அணுகுமுறை, கூட்டுப் பொறுப்பு ஏற்பு...சற்றே வியப்பை ஏற்படுத்துகிறது.

எப்பொழுதும் கீழே உள்ளவர்கள் மேல் பழி சுமத்தி மேலே உள்ள அதிகாரிகள் தங்களை தற்காத்துக் கொள்ளும், பூசி மொழுகிடும் உத்தரவுகள், கீழே உள்ள கள பிரச்சினைகளை புரிந்து கொள்ளாமல்... வசை பாடி அடிபணிய வைக்க துடிக்கும் உயர் வர்க்கத்தின் போக்கிற்கு மாற்றாக இவ்வறிக்கை உள்ளது.

மக்கள், அவர்கள் எதிர்பார்க்கும் தடையற்ற மின்சாரம்.... தரமான மின்சாரம் வழங்கும் பணியினை மேற்கொள்ளும் களப் பணியாளர்களுக்கு தேவையான தளவாட பொருட்கள், நவீன கருவிகள் மற்றும் போதுமான ஆட்கள், ஆகியவற்றை செய்து கொடுப்பதற்காக, உருவாக்கப்பட்ட பதவிகளே மற்ற பதவிகள் என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

உயர் பதவியில் உள்ளோரின் ஏதோச்ச அதிகாரப் போக்கும்.... தன்னலம் காக்கும் சுயநல அதிகார வர்க்கத்தின் இயலாமையும்.... திறனற்ற அதிகார வர்க்கம், இவ்வாரியத்திற்கு ஏற்படுத்தி வரும் கேடுகளையும் சுட்டி காட்டியுள்ளது.

புரட்சி என்பது கீழிருந்து மேலும், மாற்றம் என்பது மேலிருந்து கீழுமே நடைபெற வேண்டும். அதற்கேற்ப உயர் அதிகாரிகளின் மனோ நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

### Right Person for the Right Job...

### உரியவர் உரிய பணி இடத்தில்...

முடிவெடுக்கும் பதவிகளில் உள்ளவர்கள், முடிவெடுக்கும் திறன் உள்ளவர்களாக மாற வேண்டும் (அ) மாற்றப்பட வேண்டும். களத்தின் தேவைகளை அறிந்து உள்ளதை உள்ளபடி தெரிவித்து, அதற்கேற்ற வசதிகளை மேம்படுத்தி செய்து தரும் மனோ நிலை வேண்டும்.

கீழே உள்ளவர்களை குறை சொல்லும் போக்கை கைவிட்டு அவர்களை அரவணைத்து இணைந்து செயல்படும் மனோ நிலை வேண்டும்.

"செய்தக்க செய்யாமை யானுங் கெடும்" என்பது உணரப்பட வேண்டும்.

மாற்றத்தை விதைத்திருக்கிறது அறிக்கை, நாமும் அதனை எதிர்பார்க்கிறோம். முயன்றால் முடியாததல்ல எதுவும். இனி விடியும்..

## பொதுச் செயலாளர் கடிதம்



அன்பு பொறியாளர்களே!

வணக்கம். கொளுத்தும் கோடை வெயிலின் தாக்கத்தால் மின் நுகர்வு அபரிதமாக உயர்ந்த போதிலும், அன்றாட பராமரிப்பு பணிகளுக்குரிய தளவாட பொருட்கள் போதுமான அளவில் கையிருப்பு இல்லாத நிலையிலும், தொடர்ந்து பொது மக்களுக்கு தடையில்லா மின்சாரத்தை வழங்கிட அனைத்து ஆயத்த பணிகளையும் மேற்கொண்டு வரும் பொறியாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடி அனல் மின் நிலைய பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களின் அயராத உழைப்பினால் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த 03.04.2025 அன்று அலகு 3–ல் மின் உற்பத்தி மீண்டும் துவங்கியுள்ளது. அயராது பாடுபட்ட அனைத்து அலுவலர்கள், பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியினையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

24.3.2025 அன்று வாரிய தலைவரைச் சந்தித்து நிலுவையிலுள்ள பதவி உயர்வு நடவடிக்கைகளை இறுதி செய்து உடனடியாக பதவி உயர்வு வழங்கிடவும், ஊர் மாறுதல் விண்ணப்பங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு உடனடியாக உத்தரவுகளை வழங்கிட பணியமைப்பு நிர்வாகத்திற்கு உத்தரவிடவும், தொடரமைப்பு கழக இயக்குதல் பிரிவில் நிதி சார்ந்த நடவடிக்கைகளை GCCக்கு மாற்றுவதை நிறுத்தி வைத்திடவும் உரிய முறையீடுகள் செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் தலைமை பொறியாளர் / பணியமைப்பு அவர்களைச் சந்தித்தும் மேற்குறிப்பிட்ட கோரிக்கைகள் குறித்து முறையீடு செய்யப்பட்டு, விரைவில் பதவி உயர்வுகள் வழங்கிட வலியுறுத்தப்பட்டது.

கடந்த 03.04.2025 அன்று இணை மேலாண்மை இயக்குனர் / நிதி அவர்களை சந்தித்து, தொடரமைப்பு கழக இயக்குதல் நிதி சார்ந்த நடவடிக்கைகளை GCC உடன் இணைக்கும் முயற்சியின் பாதக அம்சங்கள் குறித்தும், இதனால் தொடரமைப்பு கழகப் பணிகளில் ஏற்படும் தேவையில்லாத நடைமுறை சிக்கல்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்து முறையீடு செய்யப்பட்டது. இந்த முயற்சியை முழுமையாக கைவிடவும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இது குறித்து இயக்குனர் / நிதி தொடரமைப்பு கழகம் அவர்களுடன் விவாதித்து முடிவெடுப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இணை மேலாண்மை இயக்குனர் / நிதி அவர்களுடன் நடைபெற்ற 03.04.2025 பேச்சுவார்த்தையினைத் தொடர்ந்து, கடந்த 09.04.2025 அன்று திட்டமிட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது. பேச்சுவார்த்தையில் இயக்குனர் / நிதி தொடரமைப்பு கழகம், இயக்குனர் / இயக்கம், மேற்பார்வை பொறியாளர் / ERP மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

தொடரமைப்புக் கழக நிதி சார்ந்த நடவடிக்கைகளை, GCC உடன் இணைப்பதில் தொடரமைப்புக் கழக பொறியாளர்களும் பணியாளர்களும் எதிர்கொள்ளும் அன்றாட அல்லல்கள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டு தற்போதைய நிலையையே தொடர சங்கத்தின் சார்பில் எடுத்துரைக்கப்பட்டது. பல்வேறு விவாதங்களுக்கு பின்னர், மறு உத்தரவு வரும் வரையில் தொடரமைப்புக் கழக நிதி சார்ந்த நடவடிக்கைகளை, தற்போது நடைமுறையில் உள்ளபடியே, TNPDCL மூலமே மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. வாரிய தலைவர் அவர்களுக்கும், துணை மேலாண்மை இயக்குனர் / நிதி மற்றும்

இயக்குனர்கள் உள்ளிட்ட வாரிய அதிகாரிகள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 07.04.2025 மற்றும் 09.04.2025 அன்று வாரியத் தலைவரை சந்தித்து,

- தொழில்நுட்ப உதவியாளர் நேரடி நியமனம்
- புதிதாக நியமிக்கப்பட்டு இயக்கத்திலுள்ள புதிய துணை மின் நிலையங்களுக்கு புதிய பணியிடங்கள் அனுமதி வழங்குதல்.
- இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை, மற்றும் முதல் நிலை பதவி உயர்வுக்கான இரண்டாண்டு பணிக்கால அனுபவத்தை மூன்றாண்டாக மாற்றியமைத்த வாரிய உத்தரவினை திரும்ப பெறுதல்.
- காலியாக உள்ள பிரிவுகளை, கூடுதல் பொறுப்பாக உதவி செயற்பொறியாளர் கவனித்திடும் உத்தரவினை திரும்ப பெறுதல்.
- நீர்மின் நிலையங்கள் மற்றும் எரிவாயு மின் நிலைய உதவி பொறியாளர்களுக்கான கூடுதல் பொறுப்புப்படி Audit slip களை திரும்ப பெறுதல்,
- கோடைக்கால மின் தேவை சமாளித்திட அத்தியாவசிய தளவாடப் பொருட்களை தடையின்றி வழங்குதல், ஒப்பந்த ஊர்தி வாகன உச்சவரம்பினை உயர்த்துதல்
- உள்முகத்தேர்வு பதவி உயர்விற்கான கருத்துருவை தமிழக அரசு தலைமைச் செயலகத்திலிருந்து விரைந்து பெற்றிட துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள,
- மின் தொடரமைப்பு கழக நிதி சார்ந்த நடவடிக்கைகளை GCC உடன் இணைப்பதை கைவிடுதல்

ஆகிய கோரிக்கைகள் குறித்து உரிய முறையீடுகளுடன் விவாதிக்கப்பட்டது.

நமது தொடர் முறையீடுகளின் பயனாக 2015 வேலைப்பளு ஒப்பந்தத்தின் மூலம் புதிதாக உருவாக்கப்பட்ட 61 பிரிவுகளுக்கான பிரிவுப்பொறியாளர் பணியிடங்களுக்கு உரிய அனுமதி பணியமைப்பு நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ளது. சங்கத்தின் திட்டமிட்ட பேச்சு வார்த்தையின் போது எழுப்பப்பட்ட நமது நீண்ட கால கோரிக்கைக்கு கிடைத்த முதல் வெற்றி.

நமது முறையீடுகளைத் தொடர்ந்து, கடந்த 29.03.2025 அன்று 211 நபர்கள் இளநிலைப் பொறியாளர் / மின்னியல் முதல் நிலை பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 02.04.2025 அன்று தலைமை பொறியாளர் / பணியமைப்பு அவர்களைச் சந்தித்து இளநிலைப் பொறியாளர் / முதல் நிலை பதவி உயர்வுகளை மார்ச் 31ல், பணி நிறைவு பெறும் பொறியாளர்கள் பயன் பெறும் வகையில் உரிய நேரத்தில் வழங்கிட அரும் பணியாற்றிய பணியமைப்பு நிர்வாகத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

மேலும், உதவிப் பொறியாளர் / மின்னியல், இயந்திரவியல் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் / மின்னியல் உள்முகத்தேர்வு நடவடிக்கைகளுக்கு அரசிடமிருந்து உரிய கருத்துரு மற்றும் அனுமதியினை விரைவில் பெற்று பதவி உயர்வுகளை வழங்கிடவும்,

இளநிலைப் பொறியாளர் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை பதவி உயர்விற்கான பணி அனுபவ காலத்தை மாற்றியமைத்த உத்தரவினை கைவிட்டு முந்தைய உத்தரவுகளையே பின்பற்றிடவும், காலியாக உள்ள பிரிவு பணியிடத்தினை உதவி செயற்பொறியாளர் கூடுதல் பொறுப்பாக கவனித்திட பணித்த உத்தரவினை ரத்து செய்யவும் உரிய முறையீடுகள் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 11.04.2025 அன்று தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு அவர்களை சந்தித்து உதவி செயற்பொறியாளர் / இயந்திரவியல் மற்றும் சிவில் பதவி உயர்விற்காக கோரப்பட்டுள்ள தகவல்கள்

முழுமையாக வந்தடைந்துள்ளதால் விரைவில் இறுதி செய்து பதவி உயர்வுகளை வழங்கிட முறையீடு செய்யப்பட்டுள்ளது. ஏனைய நிலுவையிலுள்ள அனைத்து பதவி உயர்வுகளையும் விரைவில் வழங்கிடவும் கோரப்பட்டுள்ளது.

கடந்த 21.04.2025 அன்று தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு அவர்களைச் சந்தித்து, பொறியாளர்களின் விருப்ப ஊர்மாறுதல் விண்ணப்பங்கள் மீது நீண்ட காலமாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமலிருப்பதை சுட்டிக்காட்டி உடனடியாக விருப்ப ஊர் மாறுதல் உத்தரவுகளை வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், உதவி செயற்பொறியாளர் / மின்னியல் மற்றும் இளநிலைப் பொறியாளர் / மின்னியல் இரண்டாம் நிலை பதவி உயர்வுகளுக்கான Crucial date கடந்துவிட்டதை நினைவு கூர்ந்து உடனடியாக பதவி உயர்விற்கு பட்டியல் call for செய்ய வேண்டிய முறையீடு செய்யப்பட்டுள்ளது.

பொறியாளர் சங்கத்தின் 57வது மாநில பொதுக்குழு கூட்டம், வரும் ஜூன் 14 மற்றும் 15ம் தேதிகளில் தஞ்சாவூரில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரையில் 32 கிளைகளின் ஆண்டு பேரவைக் கூட்டங்கள் உறுப்பினர்களின் ஆர்வமிக்க பங்களிப்புடன் சிறப்பாக நடைபெற்றுள்ளது. கிளைப் பொறுப்பாளர்கள் ஆண்டு பேரவை கூட்டங்களில் அனைத்து உறுப்பினர்களும் தவறாமல் கலந்து கொள்ளும் வண்ணம் உரிய முன்னேற்பாடுகளை செய்திட வேண்டுகிறேன். உறுப்பினர்கள் பேரவைக் கூட்டங்களில் தவறாது கலந்து கொண்டு இன்றைய வாரிய நிகழ்வுகளையும் மாற்றங்களையும் கண்டறிந்து, காலச் சூழலுக்குகேற்ப தங்களை தயார் செய்து கொள்ள வேண்டுகிறேன். சங்கத்தின் செயல்பாடுகள் சிறக்க தங்களது மேலான கருத்துக்களை பேரவை கூட்டங்களில் பகிர்ந்திட வேண்டுகிறேன்.

மாநில மின்வாரியங்களில் தனியார்மய நடவடிக்கைகளை திணிக்கும் மத்திய அரசின் தொழிலாளர் விரோத போக்கினைக் கண்டித்து, அகில இந்திய அளவிலான மின்துறை பொறியாளர்களின் வேலைநிறுத்தம் ஜூன் 26 அன்று நடைபெறயுள்ளது. இதற்கான ஆயத்த பணிகளை தேசிய மின்துறை பணியாளர்கள், பொறியாளர்கள் ஒருங்கிணைப்பு குழு (NCCOEEE) மேற்கொண்டு வருகிறது.

தொழிலாளர் நலனுக்கு, தேச நலனுக்கு எதிரான நடவடிக்கைகளை இனம் கண்டு, தொடர்ந்து வீறு கொண்டு எதிர்ப்போம்......

உறுப்பினர்களுக்கு உழைப்பாளர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொறியாளர் நலன் காப்போம்! தேச நலன் காப்போம்!!

ஒன்றுபடுவோம்!! போராடுவோம்!!!

வாழ்க பொறியாளர் சங்கம்.

நன்றி

பொர்.V.S.சம்பத்குமார்
பொதுச் செயலாளர்

## இரத்ததான முகாம்

14.02.2025 அன்று நமது சங்கத்தின் சார்பாக கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற இரத்ததான முகாமில் கலந்துகொண்டு எட்டு நபர்கள் இரத்ததானம் செய்துள்ளனர் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றும் சமூக நலனில் அக்கறையுடன் பொறியாளர் சங்கம்...

**வாழ்க பொறியாளர் சங்கம்**

கோ.கோபி,
செயலாளர் / **TNEB** பொறியாளர் சங்கம்,
கரூர் கிளை.

# OUR REPRESENTATIONS

To
**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,**
TNPDCL, Chennai-600 002.

Lr.No.GS/ TNEBES/ F1/ D.62 / 2025, Dt.03.04.2025.

Respected Sir,

Sub: Important points submitted to respected CMD during the discussion held with our Sangam on 04.03.25–Reiteration of points for necessary solution –Submitted reg.

Detailed discussion was held with our Sangam by the respected CMD on 04.03.2025.

Few of the points raised during that discussion has been considered, particularly pending promotion orders has been released since then for 2 categories for which we are very much thankful to the respected Chairman cum Managing Director.

Certain other grievances of importance which needs immediate attention is being reiterated here and listed below.

We kindly request the intervention of the respected Chairman cum Managing Director to instuct the Officials concerned for initiating the process and settle the grievances early please.

**1.Amendment in Note 2 of Service Regulation:**

The ambiguous class in Note 2 of Service Regulation which paved way for mere Degree Holders to squeak into the Technical Assistant Recruitment during the year 2019, breaking the 4 decade old practice to be corrected necessarily to safeguard the interests of the Diploma Community and also the wellbeing of the Board.

**2. New Post Sanction:**

Sanctioning of New Posts as per existing Work Load settlement particularly for newly commissioned Substations and new Projects to be made for the betterment of the Board as per prevailing norms.

**3.Revocation of Orders on Minimum Service:**

Board orders amending Service Regulation passed during Corona period increasing the minimum period of service for Junior Engineer I Grade and II Grade and other categories promotions to be restored to its earlier self.

**4.Withdrawal of Additional Charge Orders:**

Recently issued orders stipulating AEEs to look after vacant AE / JE1 sections in Distribution areas to be withdrawn for better service to the public.

**5.Additional Charge Allowance:**

Additional Charge to be sanctioned and Allowance to be permitted for the field Engineers working in Gas Turbine Power Stations like their counterparts working in Thermal Plant and other Generating Stations. Also audit slips raised in this regard at Gas Turbine Power Stations needs to be dropped immediately paving way for peaceful retirement to the Engineers on the verge of retirement.

**6.Distribution Wing:**

- **Essential Materials required for maintaining Uninterrupted Power Supply:**
  - Tinned Copper Fuse wire.
  - 33 KV & 11 KV AB switch
  - 11 KV structure materials
  - Distn. transformers Oil (RC Oil)
  - PT & PIN insulators (11KV, 33 KV & LT)
  - LT UG 4 x 240 Sq. mm and 4 x 120 Sq. mm Cables
  - Distribution transformers – 63, 100, 250 & 500 KVAs
  - Meters 5 - 20 A (S Ph) & 10 - 60A (3 Ph)
  - 33 KV, 11KV & LT Cable straight joint kits.
  - 11 KV & 33 KV Fixed and moving contacts.
  - Line materials - Stem bolts, "U" Clamps and Hexagonal Insulators
- **Availability of Vehicles in field :**

Works carried out by the special fields like MRT, Special Maintenance, GRT, GIS, Lines, Cables, HT Mobiles, etc., are totally dependent on vehicles.

More over vehicles for the field officers too could not be engaged. The daily rental limit and ceiling limit for utilizing these vehicles is currently inadequate which needs to be enhanced immediately.

Availability of lorries for transporting materials to the field is highly essential without which the works are getting affected totally. Provisioning of lorries to the field is highly essential for effective maintenance of field works which needs to be settled immediately.

Thanking You, Sir, Yours Sincerely,

**V.S.SAMPATHKUMAR** / General Secretary.

To

**THE CHIEF ENGINEER / PERSONNEL,**

TNPDCL, Chennai-600 002.

Lr.No.GS/ TNEBES/ F1/ D. 63/ 2025, Dt. 09.04.2025.

Respected Madam,

Sub: Suitability Report called for AEE/Civil Promotions–Particulars received and under consolidation – Conducting of DPC and issuing of promotions at the earliest -Requested – Regarding.

Ref: Letter No. 046120/G.2/G.2(1)/2024-4, Dated: 14.02.2025

Suitability report has been called among 56 persons for promotion to the post of Assistant Executive Engineer / Civil vide reference cited above. Particulars have been received from the field and getting consolidated.

The individuals aspiring for this promotion from the category of Assistant Engineer / Junior Engineer I Grade are anxiously awaiting for this promotion for quite a long period.

We request the respected Chief Engineer / Personnel to expedite the process by conducting DPC at the earliest, issue promotions and thus render justice please.

Thanking You, Madam,

Yours Sincerely,

**V.S. SAMPATHKUMAR /** General Secretary.

---

To

**THE CHIEF ENGINEER / PERSONNEL,**

TNPDCL, Chennai - 600 002.

Lr.No.GS/ TNEBES/ F1/ D.64 /2025, Dt. 09.04.2025.

Respected Madam,

Sub: Suitability Report called for AEE/Mechanical Promotions–Particulars received and under consolidation – Conducting of DPC and issuing of promotions at the earliest - Requested - Regarding

Ref: Letter No. 042137/G.2/G.2(1)/2024-3, Dated: 14.02.2025

Suitability report has been called among 75 persons for promotion to the post of Assistant Executive Engineer/Mechanical vide reference cited above. Particulars have been received from the field and getting consolidated.

The individuals aspiring for this promotion from the category of Assistant Engineer / Junior Engineer I Grade are anxiously awaiting for this promotion for quite a long period.

We request the respected Chief Engineer / Personnel to expedite the process by conducting DPC at the earliest, issue promotions and thus render justice please.

Thanking You, Madam,

Yours Sincerely,

**V.S. SAMPATHKUMAR /** General Secretary.

---

To

**THE CHIEF ENGINEER / PERSONNEL,**

TNPDCL,Chennai-600 002.

Lr.No.GS/ TNEBES/ F1/ D.65/ 2025, Dt.16.04.2025.

Respected Madam,

Sub: Calling for of Suitability for AEE / Electrical Promotions - requested regarding

Promotions for the post of Assistant Executive Engineer / Electrical were issued a couple of months ago. Subsequently sizeable number of vacancies have arose in this category. Filling up of these vacancies would be very much beneficial for not just the individuals but the Board too.

The individuals aspiring for this promotion from the category of Assistant Engineer / Junior Engineer I Grade are awaiting for their turn of promotion anxiously.

We request the respected Chief Engineer / Personnel to do the needful for calling for of suitably from eligible individuals for promotion to the post of Assistant Executive Engineer / Electrical for the crucial date on 05.08.2024 at the earliest and thus render justice please.

Thanking You, Madam,

Yours Sincerely,

**V.S. SAMPATHKUMAR /** General Secretary.

To
**THE CHIEF ENGINEER / PERSONNEL,**
TNPDCL, Chennai-600 002.

Lr.No.GS/ TNEBES/ F1/ D.66 / 2025, Dt.16.04.2025.

Respected Madam,

Sub: Suitability Report to be called for the post of Junior Engineer / Elect. II Gr.-requested regarding

Huge number of vacancies existed in 110 KV Substations. Based on our Sangam's persistent representation a part of the vacancies were filled by issuing promotion of Junior Engineer / Electrical II Grade few months ago. Subsequently Junior Engineer / Electrical II Grade to Junior Engineer / Electrical I Grade promotions were issued for 211 Persons, thereby creating vacancies in Junior Engineer Grade – II posts

Now, as the above posts are lying vacant, affecting the operation work in these Substations. Filling up of these posts by issuing Junior Engineer / Electrical II Grade promotions would be very much beneficial to the Board.

Hence we request the respected Chief Engineer / Personnel to call suitability report among eligible Technical Assistant / Electrical for promotion to the post of Junior Engineer / Electrical II Grade, for the crucial date of 20.03.2025 at the earliest please.

Thanking You, Madam,

Yours Sincerely,

**V.S. SAMPATHKUMAR /** General Secretary.

## BOARD ORDERS

**TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED ::**

Memo No.016905/G.36/G.361/2025, Dated: 07.04.2025.

Sub: TNPDCL-Works Contract / Contract in which labour engaged - Works to be executed only through the Licenced Contractors - Instructions - Regarding.

Ref: 1) Memo. No.018289/G.40/G.401/2021, dated 22.04.2021
2) Memo. No.018289/G.40/G.401/2021-2, dated 23.04.2021.

In TNPDCL, TNPGCL, TNGECL and TANTRANSCO, most of the works are being carried out through works contract after issuing orders and execution of an agreement.

2) Complaints Petitions have been received from the contractors stating that, the contractors were instructed orally to execute the work without any Agreement /Order and so the bills are not passed and paid to the contractors. The contractors have also reported that, they are not able to pay the wages to the labourers engaged by them.

3) It is also brought to the notice that, in certain works executed by opening temporary advance / Imprest amount, the Assistant Engineers have issued payments directly to the non-licenced contractor/person without ensuring the Statutory Compliance.

4) Several instructions have already been issued vide references cited above, with regard to the conditions to be incorporated and to be followed for executing the works contract/contract in which labour are to be engaged. In order to avoid such complaints in future, the works have to be executed only after issuing Acceptance Order and executing agreement. As such, the emergency work executed by temporary advance / Imprest amount should only be executed through the Contractor holding the valid labour licence under the Contract Labour (Regulation and Abolition) Act, 1970 pertaining to the respective circle/ station and also only after issuing an order for the works. The payment for such works should only be passed after ensuring the remittance of EPF/ESI (or) after verifying the Statutory Compliance Clearance Certificate.

5) Hence, the Chief Engineers and the Superintending Engineers are requested to ensure the above instruction without any deviation to avoid litigations in future.

**M.AMBIGA**
CHIEF ENGINEER/PERSONNEL

**TAMIL NADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**
**(ABSTRACT)**

TNPDCL-WAGE AND WORKLOAD REVISION 2023-Committee to hold negotiations with Unions Constituted Orders-Issued.

**(SECRETARIAT BRANCH)**

(Per) CMD TNPDCL Proceedings No.68. Dated 11th March 2025.
Maasi 27, Krothi Varudam
Thiruvalluvar Aandu 2056.

Read:

1. Memorandum of 12 (3) Settlement with Unions before the Additional Commissioner of Labour, Chennai, dated 16.05.2023.
2. (Per) FB TANGEDCO Proceedings No.13 (58), dated 24.05.2023.
3. (Per) FB TANGEDCO Proceedings No.14 (SB), dated: 24.05.2023.

**PROCEEDINGS:-**

A Memorandum of Settlement on Revision of Wages to the Workmen of erstwhile Tamil Nadu Generation and Distribution Corporation Limited was secured with the Unions on 16.05.2023. In pursuance of the Memorandum of Settlement, orders were issued in (Per) FB TANGEDCO Proceedings No.13 (SB) dated 24.05.2023 and (Per) FB TANGEDCO Proceedings No.14 (SB) dated 24.05.2023, for revising the Wages / Pay to the Workmen and Officers of the erstwhile TANGEDCO respectively.

2. As the settlement referred to in para-1 above expired on 30.11.2023 and as the Revision of Wages referred to in para-1 above is due on 01.12.2023, it has been decided to constitute a "WAGE REVISION COMMITTEE" to negotiate with the Unions mentioned in the Annexure to this Board's Proceedings for revising the pay matrix and Work allocation and Staff pattern to be given effect from 01.12.2023.

3. In pursuance of the above decision, a "WAGE REVISION COMMITTEE" is constituted with the following Directors/Officers to negotiate with the Unions mentioned in the Annexure to this Board's Proceedings for revision of pay matrix and Work allocation and staff pattern to be effective from 01.12.2023 for Class III and IV Employees:-

I. Director (Finance)/TNPDCL.
ii. Managing Director/TANTRANSCO.
ii. Director (Distribution)/TNPDCL.
iv. Director, Technical/TNPGCL.
v. Director, Technical/TNGECL.
vi. Secretary/TNPDCL.
vii. Chief Engineer/Personnel/TNPDCL.
viii. Chief Financial Controller/General/TNPDCL.

The Director (Finance)/TNPDCL will be the Chairman of the Wage Revision Committee and the Secretary/TNPDCL the Convener.

**Dr.J.RADHAKRISHNAN**
CHAIRMAN AND MANAGING DIRECTOR

**TAMIL NADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**

SECRETARIAT BRANCH
N.P.K.R.R. MAALIGAL,
144, ANNA SALAI
CHENNAI-2

Memo. (Per.) No.5793/A16/A161/2025-1. Dated 11.03.2025.

Sub: TNPDCL Union Tamil Nadu Electricity Board Engineers' Sangam (Reg.No.124/MDS) - Deduction of Annual Subscription from the salary of willing members of the Union Enhancement Orders Issued.

Ref: 1. (Per) B.P (Ch) No.111 (SB), dated 09.05.2007.

2.Secretariat Branch Memo.(Per.)No.27395/A3/A31/2017-1,dated 07.06.2017.

3.Secretariat Branch Memo. (Per.) No.43915/A3/A31/2020-4, dated.10.08.2021.

4.From the General Secretary of Tamil Nadu Electricity Board Engineers' Sangam (Reg. No.124/MDS), letter dated 24.02.2025.

In the Board's Proceedings first cited, detailed guidelines were issued for deduction of Annual Union Subscription and Donation from the salary of the willing employees. In the standard terms and conditions annexed to the Board's Proceedings, it has been ordered that the subscription shall be deducted from the pay bill of May payable in June and Donation shall be deducted from the pay bill of November payable in December every year.

2. In the reference third cited, orders were issued for deduction of Annual Subscription / Donation be permitted from the willing employees of their Union every year and also ordered that the willing employees who made specific request for deduction of Annual Subscription / Donation to the Pay Drawing Officer before 15th May of a year for a union shall be in force for three years. After that the employees should renew their request to the Pay Drawing Officer to deduct Annual Subscription/Donation to their unions.

3. In the reference second cited, orders have been issued for the deduction of Annual Subscription for a sum of Rs.300/- (Rupees three hundred only) from the salary of willing members of Tamil Nadu Electricity Board Engineers' Sangam (Reg.No.124/MDS) who made specific written authorization.

4. Now, the General Secretary of Tamil Nadu Electricity Board Engineers' Sangam (Reg. No. 124/MDS), had made a specific request for the enhancement of Annual Subscription for a sum of Rs.500/- (Rupees five hundred only) from the salary of willing employees of the above said Union, who give specific written authorization.

5. The request has been examined and accepted. Accordingly, it is hereby ordered that a sum of Rs.500/- (Rupees five hundred only) towards subscription be deducted from the willing members of Tamil Nadu Electricity Board Engineers' Sangam (Reg. No.124/MDS), who made specific written authorization. The enhanced subscription shall be deducted from the pay bill for the month of May payable in June 2025 onwards as per the existing conditions.

6. The Annual Subscription shall be made in the Account Head: 44.454 Tamil Nadu Electricity Board Engineers' Sangam.

(BY ORDER OF THE CHAIRMAN AND MANAGING DIRECTOR)

**R.DEVARAJ,**
SECRETARY

**TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED (TNPDCL)**

ABSTRACT

Establishment – TNPDCL – Redeployment of 104 posts in various cadres to the 8 Nos. of newly formed O&M Divisions in various Electricity Distribution Circles – Orders issued.

(Administrative Branch)

(Per.) MD TNPDCL Proceedings No.46 — Dated.16.04.2025.
Visuvavasu Varudam
Chithirai -03,
Thiruvalluvar Aandu 2056

**READ:**

1) Minutes of the 108th Meeting of the Board of TANGEDCO held on 28.09.2022.
2) Minutes of the 109th Meeting of the Board of TANGEDCO held on 19.11.2022.
3) Note approved by the Members of the Board of TANGEDCO by Circulation on 13.12.2022.
4) (Per.) FB TANGEDCO Proceedings No.7, (Adm. Branch). dated 15.03.2023.
5) (Per.) FB TANGEDCO Proceedings No.19, (Adm. Branch), dated 16.12.2023.
6) Note approved by the CMD/ TNPDCL on 16.04.2025.

**PROCEEDINGS:**

The Board of TANGEDCO in its Meetings have accorded approval for formation of new 10 Nos. of O&M Divisions (namely, Sholinganallur in Chennai EDC/South-II, Pallavaram in Chennai EDC/South-II, Denkanikottai in Krishnagiri EDC, Pennagaram in Dharmapuri EDC, Thiruvennainallur in Villupuram EDC, Uthukuli in Tiruppur EDC, Vedasanthur in Dindigul EDC, Jayamkondam in Perambalur EDC, Sattur in Virudhunagar EDC and Gangavalli in Salem EDC) and necessary orders have been issued vide Proceedings 4th read above. Initially, the posts only for 2 Nos. of Divisions, viz., Sholinganallur and Pallavaram have been redeployed vide Proceedings 5th read above.

2) Subsequently, approval is hereby accorded for redeployment of the following 104 posts in various cadres to the remaining 8 Nos. of newly formed O&M Divisions in various Distribution Circles :-

| SL.NO | Name of the redeployed posts | No. of posts for the 8 Divisions |
|---|---|---|
| 1 | Executive Engineer (Electrical) | 8 |
| 2 | Administrative Supervisor | 8 |
| 3 | Assistant (Adm.) | 16 |
| 4 | Accounts Supervisor | 8 |
| 5 | Assistant (Accounts) | 8 |
| 6 | Junior Assistant (Adm.) | 8 |
| 7 | Office Helper | 16 |
| 8 | Technical Assistant | 16 |
| 9 | Commercial Inspector | 16 |
| | **Total posts** | **104** |

3) The split up details of redeployed posts (with relevant Position IDs) to the 8 Nos. of newly formed O&M Divisions are furnished in the Annexure enclosed.

4) The concerned Superintending Engineers are directed to intimate the actual date of utilisation of the above sanctioned posts to this office promptly.

5) The expenditure is debitable to the following Head of Account:

"TANGEDCO Funds - Revenue Expenses - 40 - Employees Cost - 4030 Salaries - 4030102 Salaries - Provincial & RWE - Employees Cost."

6) The receipt of the Proceedings shall be acknowledged.

(By Order of the CMD/TNPDCL)

Encl.: Annexure

**M. AMBIGA**
CHIEF ENGINEER/ PERSONNEL

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1—1)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை—9.

<u>திருவள்ளுவர் 2056/ குரோதி/ சித்திரை—01 அரசுக்கடித எண்.9030988/தவ.1—1/2025—1, நாள் 14.04.2025</u>

அனுப்புநர்
திரு. வே.ராஜாராமன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்கள் /
முதன்மை செயலாளர்கள் / செயலாளர்கள் /அனைத்து தலைமைச் செயலகத் துறைகள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து துறைத் தலைமை அலுவலர்கள். (இணைப்புடன்)

ஐயா / அம்மையீர்.

பொருள்: தமிழ் வளர்ச்சி ஆட்சிமொழி திட்ட செயலாக்கம்—வெளியிடப்பட்ட அரசாணைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பது தொடர்பாக

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.2070. கல்வி (தமிழ் வளர்ச்சி)த் துறை, நாள் 02.12.1971.
2. அரசாணை (நிலை) எண் 371, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, நாள் 31.10.1986.
3. அரசாணை (நிலை) எண் 182, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, நாள் 27.06.1989.
4. அரசாணை (0) எண்41. தமிழ் வளர்ச்சி—பண்பாடு (ம) அறநிலையத்துறை. நாள் 20.02.2008.
5. அரசுக் கடித (நிலை) எண் 12/ த.வ.1.1/ 2021—1. நாள் 22.01.2021.
6. தலைமைச் செயலாளரின் அரசுக் கடித (நிலை) எண்.66/ த.வ.1.1/ 2021—1 நாள் 12.07.2021 அனைத்து தலைமை செயலகத் துறைகள்/துறைத் தலைமை அலுவலர்களுக்கும் முகவரியிடப்பட்டது.
7. தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின் கூட்டக் குறிப்பு நாள் 18.03.2025.

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் கடிதங்களின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. தமிழ் ஆட்சிமொழி சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும், அரசு அலுவலகங்களில் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழ்மொழியை பயன்படுத்தவும் கீழ்காணும் அறிவுறுத்தல்களை தவறாது பின்பற்றுமாறு தங்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது—

- அரசாணைகள் தமிழில் மட்டுமே வெளியிடப்படல் வேண்டும்.
- சுற்றாணைக் குறிப்புகள் தமிழிலேயே இருக்க வேண்டும்
- துறைத் தலைமை அலுவலகங்களிலிருந்து அரசு மற்றும் பிற அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் கருத்துரைகள் தமிழிலேயே இருக்க வேண்டும். வெளியிடப்படும் கடிதங்கள், அலுவலக ஆணைகள் மற்றும் இதர கடிதம் போக்குவரத்துகள் ஆகியவை விலக்களிக்கப்பட்ட இனங்கள் தவிர எல்லா இனங்களிலும் தமிழில் தான் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- பொதுமக்களிடமிருந்து தமிழில் வருகின்ற கடிதங்களுக்குத் தமிழிலேயே பதில் எழுதுவதுமில்லாமல் அவை பற்றிய குறிப்புகள் யாவும் தமிழிலேயே இருக்க வேண்டும்.
- அரசுப் பணியாளர்கள் அனைத்து இனங்களிலும் தமிழில் மட்டுமே கையொப்பமிட வேண்டும்.
- மேலும் ஆங்கிலத்தில் வெளியிட விலக்களிக்கப்பட்டுள்ள இனங்களுக்கு நேர்வுக்கேற்ப தலைமைச்செயவகத் துறைகளால் ஆங்கிலத்தில் வெளியிடப்படும் அரசாணைகளை தமிழில் வெளியிடுவதற்கு ஏதுவாக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் மொழிபெயர்ப்பு பிரிவு மூலம் தமிழாக்கம் செய்வதற்கு அனுப்பிவைக்கவும் அல்லது அந்தந்த துறைகளாலேயே தமிழில் மொழிபெயர்க்கப்படும் அரசாணைகளை தேவைப்படின் கூர்ந்தாய்வு செய்யும் பொருட்டு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் மொழிபெயர்ப்பு பிரிவுக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள.
14/4/25 அரசு செயலாளருக்காக

## பத்திரிக்கைச் செய்திகள்

### உள்ளாட்சி அமைப்புகள் செலுத்த வேண்டிய மின் கட்டணம் ரூ.1618 கோடியை வசூலியுங்கள்

சென்னை,எப். 4–

உள்ளாட்சி அமைப்பு, கடந்த 2023 மார்ச் நிலவரப்படி செலுத்த வேண்டிய, 137 கோடி ரூபாய் தாமத கட்டணத்தை தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற மின்வாரிய கோரிக்கையை, மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிராகரித்துள்ளது. அதை சேர்த்து, 1,618 கோடி ரூபாய் மொத்த நிலுவை கட்டணத்தை முழுதுமாக வசூலிக்குமாறு, ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வீடுகளில் மின் பயன்பாடு கணக்கு எடுத்த நாளில் இருந்து, 20 தினங்களுக்குள் மின் கட்டணம் செலுத்த வேண்டும். இல்லையெனில், மின் வினியோகம் துண்டிக்கப்படும். தாமத கட்டணத்துடன் சேர்த்து, மின் கட்டணம் செலுத்தியதும் மின்சாரம் வழங்கப்படும்.

ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்றவற்றை உள்ளடக்கிய உள்ளாட்சி அமைப்புகள், குடிநீர் வினியோகம், தெருவிளக்கு போன்ற சேவைகளை செய்கின்றன. இதனால், மின் பயன்பாடு கணக்கு எடுத்த தேதியில் இருந்து மின் கட்டணம் செலுத்த, 60 நாட்கள் அவகாசம் அளிக்கப்படுகிறது. இருப்பினும், அவை குறித்த காலத்தில் மின் கட்டணம் செலுத்துவதில்லை. அதற்காக மின் வினியோகம் துண்டிக்கப்படுவதும் இல்லை.

கடந்த 2023 மார்ச் 31 நிலவரப்படி, ரூபாய் 1,481.41 கோடி மின் கட்டணம் மற்றும் அதற்கு தாமத கட்டணம், ரூபாய் 187.13 கோடி என, மொத்தம் ரூபாய் 1,618.54 கோடியை மின் வாரியத்திற்கு செலுத்தாமல் உள்ளாட்சி அமைப்புகள் நிலுவை வைத்துள்ளன. தாமத கட்டணத்தை தள்ளுபடி செய்ய வலியுறுத்தின.

அதன் அடிப்படையில், தாமத கட்டணத்தை தள்ளுபடி செய்ய கோரிய மனுவை ஆணையத்திடம், மின் வாரியம் தாக்கல் செய்தது. இதை விசாரித்த ஆணையம், தாமத கட்டணத்தை தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்துள்ளது. தாமத கட்டணம் சேர்த்து, 1618 கோடி ரூபாய் நிலுவையையும் வசூலிக்குமாறு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, மின் வாரிய நிதி பிரிவு அதிகாரி ஒருவர் கூறியதாவது:

வீடுகளுக்கு தாமத கட்டணம் மாதத்திற்கு. 1.50 சதவீதம் வசூலிக்கப்படும் நிலையில், உள்ளாட்சிகளுக்கு, 0.5 சதவீதம் தான் வசூலிக்கப்படுகிறது உள்ளிட்ட காரணங்களை கூறி, ஆணையம் நிராகரித்து விட்டது.

மேலும், அரசு அலுவலகங்களில் செலுத்தியதற்கு ஏற்ப மின்சாரம் பயன்படுத்தும், பிரிபெய்ட் மீட்டர் பொருத்து மாறும் தெரிவித்துள்ளது. இதை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படடும். இவ்வாறு அவர் கூறினார்.

| 2023 மார்ச் நிலவரப்படி நிலுவை தொகை (ரூபாய் கோடியில்) | | | | |
|---|---|---|---|---|
| **உள்ளாட்சி** | **மின் இணைப்புகள்** | **மின் கட்டணம்** | **தாமத கட்டணம்** | **மொத்தம்** |
| ஊராட்சிகள் | 6,49,212 | 605.76 | 28.94 | 634.70 |
| பேரூராட்சிகள் | 81,169 | 40.67 | 0.84 | 41.50 |
| நகராட்சிகள் | 60693 | 274.81 | 25.91 | 300.72 |
| மாநகராட்சிகள் | 65484 | 374.84 | 56.20 | 431.04 |
| சென்னை மாநகராட்சி | 12050 | 185.34 | 25.24 | 210.58 |
| **மொத்தம்** | **8,68,608** | **1481.41** | **137.13** | **1618.54** |

– நன்றி தினமலர்

### 3 கோடி ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்த டெண்டர் கோரியது தமிழக அரசு.

மின் இணைப்புகளில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்த 20,000 கோடி செலவில், 3 கோடி ஸ்மார்ட் மீட்டர்களை கொள்முதல் செய்ய டெண்டர் கோரியது தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்.

ஒரு மாதத்தில் டெண்டர் நடவடிக்கைகள் இறுதி செய்யப்பட்டு, விரைவில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணிகள் தொடங்கவுள்ளன.

தமிழகத்தில் 2026–க்குள் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு காலக்கெடு நிர்ணயித்துள்ளது.

## Grid-India flags under-drawal of power by T.N. Transmission Corporation Limited

Sanjay Vijayakumar, Chennai

The Grid Controller of India Limited (Grid-India) has written to the Tamil Nadu Transmission Corporation Limited (Tantransco), flagging under-drawal of power from the grid.

The under-drawal by the Tantransco has been continuous and the maximum quantum reached around 1,500 MW on April 6, Grid-India said in its letter.

Grid-India is an enterprise under the Union Ministry of Power. One of its regional arms, the Southern Regional Load Despatch Centre (SRLDC), looks after the grid functions of the southern region. Tamil Nadu meets the deficit during summer through short-term power procurement and swapping arrangements.

**Under-drawal has been continuous and the maximum quantum reached around 1500 MW on April 6**

The power transfer capability from other States (Andhra Pradesh, Karnataka, Telangana) to Tamil Nadu by Inter-State Transmission lines is termed as Available Transfer Capability (ATC). This is used to draw power from other States utilising the existing transmission system by way of Long Term Agreement from Central Generating Stations, Medium Term Open Access and Short Term Open Access, According to the State Energy Department policy note for 2024-25, the ATC was 10,900 MW.

Grid-India further pointed out that the SRLDC control room consistently sent messages regarding the heavy under-drawal by Tamil Nadu.

The SRLDC had said that the State was continuously under-drawing since April 6, 7.30 am. The power demand has not reduced incessantly, and has been in the range of 13,500-14,000 MW on April 6. Yet, under drawal has been increasing, it noted.

Grid-India said there had been a considerable under-drawal by Tamil Na du on March 22, March 23, March 29, April 2, April 3, April 4 and April 5. As the Southern region is into the peak demand season, it is once again iterated to plan the power portfolio of the State proactively, and refrain from huge under-drawals, it added.

Besides, during the period of under-drawal, the North Chennai Thermal Power Station (NCTPS) Stage 3 unit 1 (800 MW) was generating infirm injection of 500-600 MW.

The infirm injection of NCTPS Stage 3, Unit 1 started on January 14, 2024, and the commercial operation date of the unit is yet to be declared, it noted. The injection of infirm power shall be appropriately reviewed in accordance with the real time system conditions, Grid-India added.

## Court gave relief to Government Employees

Agency. New Delhi.

On Friday, the Supreme Court gave a big relief to 44 lakh current and retired central employees and said that CGHS will be applicable in all private hospitals of the country, whether they are included in the panel or not. The court said that getting good medical facilities is the right of every government employee.

Therefore, the central government will not refuse to pay any such bill.

The government can do this if the employee has taken treatment in any private hospital which is not included in the panel. The Supreme Court-clarified that it is important for the government to see whether the concerned person has actually taken treatment or not. Even if he has taken treatment in a private hospital which is not included in the panel, all the bills should be paid to him, payment should not be stopped under any circumstances only on a technical basis.

## இலவச மின்சாரத்துக்கு ரூ.16,274 கோடி மின்வாரியத்திற்கு வழங்க அரசுக்கு உத்தரவு

சென்னை, மார்ச் 30–

இலவச மற்றும் மானிய விலை மின்சாரத்துக்கு, வரும் நிதியாண்டிற்கு மின் வாரியத்திற்கு, 16,274 கோடி ரூபாய் வழங்க, தமிழக அரசுக்கு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் வீடுகளுக்கு 100 யூனிட் வரை இலவசமாகவும், 500 யூனிட் வரை மானிய விலையிலும் மின்சாரம் வழங்கப்படுகிறது. குடிசை வீடுகள், விவசாயத்திற்கு முழுவதும் இலவச மின்சாரமும், விசைத்தறி உள்ளிட்ட பிரிவுகளுக்கும் மானிய விலையிலும் மின்சாரம் வழங்கப்படுகிறது.

இதற்காக, மின் வாரியத்திற்கு ஏற்படும் செலவை, தமிழக அரசு மானியமாக வழங்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு மானிய தொகை வழங்க வேண்டும் என்பதை, மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மதிப்பீடு செய்து அரசுக்கு உத்தரவிடுகிறது. அதற்கு ஏற்ப, அந்த தொகை மின்வாரியத்திற்கு ஒவ்வொரு காலாண்டிற்கும் வழங்கப்படுகிறது. அதன்படி வரும், 2025 – 2026ம் நிதியாண்டிற்கு, 16,274 கோடி ரூபாய் வழங்க மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதில், வீடுகளுக்கான மானியம், 7,752 கோடி ரூபாய்; விவசாயத்திற்கு, 7,047 கோடி; குடிசை வீடுகளுக்கு, 360 கோடி; வழிபாட்டு தலங்களுக்கு, 20 கோடி; விசைத்தறிக்கு, 560 கோடி; கைத்தறிகளுக்கு. 15 கோடி; தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு, 398 கோடி; அடுக்குமாடி குடியிருப்புகளின் பொது மின் இணைப்புகளுக்கு, 49 கோடி ரூபாய் அடங்கும்.

## 19,000 மெகாவாட்டை எட்டியது மின் நுகர்வு

தமிழக மின் நுகர்வு தினமும் சராசரியாக, 16,000 மெகாவாட்டாக உள்ளது. இது, கோடை காலத்தில் அதிகரிக்கிறது. அதன்படி, கடந்த ஆண்டு மே, 2ம் தேதி, 20,830 மெகாவாட்டாக அதிகரித்தது. இதுவே, இதுவரை உச்ச அளவாக உள்ளது. இம்மாதம் துவக்கத்தில் இருந்து வெயில் கடுமையாக உள்ளதால், தினசரி மின் தேவை, 18,000 மெகாவாட், 18,500 மெகாவாட் வரை இருந்தது. இந்நிலையில், 30.03.2025 அன்று 19,000 மெகாவாட்டை எட்டியுள்ளது. இதுவே, இந்த ஆண்டில் இதுவரை அதிகபட்ச அளவு. இதே அளவுக்கு மின் உற்பத்தி, மின் கொள்முதல் இருந்ததால், மின்பற்றாக் குறை ஏற்படவில்லை. வரும் ஏப்ரல், மே மாதங்களில், மின் தேவை 22,000 மெகா வாட்டை எட்டும் என மின் வாரியம் மதிப்பீடு செய்துள்ளது.

## திருமண அழைப்பிதழ்

**மணமகள் வீட்டார்**

திரு.G. பிரபாகரன், AEE/230KV Athipet SS
திருமதி.D. காஞ்சனமாலா
தம்பதியரின் இளைய குமாரத்தி
சௌபாக்கியவதி
**P. சுப்ரியா, M.Sc., M.Phil.,**
என்கிற கன்னிகைக்கும்



**மணமகன் வீட்டார்**

திரு.D. லோகநாதன்,
தெய்வத்திருமதி.L. சாந்தி
அவர்களின் சீமந்த புத்திரன், சிரஞ்சீவி
**L. மகேஷ் குமார், M.Tech**
Deputy Manager,
Corporation Technology Center, TI India.
என்கிற வரனுக்கும்

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்தவண்ணம் 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள், சென்னை–73, ராஜகீழ்பாக்கம், மாடம்பாக்கம் மெயின் ரோடு, எண்.1 –ல் அமைந்துள்ள **சனந்தா கல்யாண மண்டபத்தில்** நடைபெறும் திருமணத்திற்கு தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள
திரு.G. பிரபாகரன், AEE/230KV Athipet SS
9840185672
திருமதி.D. காஞ்சனமாலா

**மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

**மின் அலை வளர்ச்சி நிதியாக பொர். G. பிரபாகரன்,** AEE/230KV Athipet SS,
**சென்னை வடக்கு கிளை அவர்கள் ரூபாய்.1001/–அளித்துள்ளார், நன்றி**

## போராடும் உத்திரபிரதேசப் பணியாளர்கள்..!

மின் வாரியங்கள் தனியார்மயத்தை எதிர்த்து நாடு முழுவதும் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், வட மாநிலங்களில் மின் வாரியங்கள் தனியாருக்கு தாரை வார்ப்பது வேகம் எடுக்கிறது.

சண்டிகர் யூனியன் பிரதேசத்தில் அங்குள்ள மின் துறையை (Electricity Department) முழுவதுமாக கொல்கத்தா கம்பெனிக்கு கொடுத்து விட்டது அந்த அரசு சுமார் 500 நிரந்தர பணியாளர்கள், 1000 ஒப்பந்த தொழிலாளர்கள் எதிர்காலம் இருண்டுவிட்டது. விலைக்கு வாங்கிய தனியார் கம்பெனி, நீதிமன்றம் மூலம் சட்டப்படி சம்பளத்தை குறைக்கவும், வீட்டிற்கு அனுப்பவும் முயற்சி செய்கிறது.

இந்த நிலையில் கும்பமேளா காரணமாக சற்றே தாமதப்படுத்தப்பட்ட உத்தரபிரதேச மின்சார வாரிய தனியார்மயம், தற்போது வேகம் எடுக்கிறது. அங்கு அரசு மின் வினியோக நிறுவனங்களாக உள்ள வாரணாசி மற்றும் ஆக்ரா மின் வினியோக நிறுவனங்களை (சுமார் 52 மாவட்டங்கள், மீரட் உள்ளிட்ட ஐந்து பெரிய நகரங்கள் இதில் அடங்கும்) தனியார்வசம் ஒப்படைக்க வேகமாக முயற்சிக்கிறது.

**ஆயிரக்கனக்கான தொழிலாளர்கள், பொறியாளர்கள் வீதியில் இறங்கி போராடுகின்றனர்.**

AIFOPDE அங்கம் வகிக்கும் NCCOEEE சென்னை உள்ளிட்ட அனைத்து மண்டலங்களிலும் கூட்டங்களை நடத்தி ஆலோசனை செய்து வருகிறது. விரைவில் நாடுதழுவிய போராட்டங்கள் நடக்க முடிவுகள் எடுக்கப்பட உள்ளன. எதற்கும் தயாராவோம்.

முனைவர் சா.சம்பத்
மாநில அமைப்பு செயலாளர்,
தென் மண்டல தலைவர்/AIFOPDE

## மே தினம்

உழைப்பாளர் தினம் என்பது உலகெங்கும் உள்ள தொழிற்சங்கங்களையும் தொழிலாளர்களின் உரிமைகளையும் சாதனைகளையும் நினைவு கூர்ந்து கொண்டாடப்படும் ஒரு முக்கிய தினம் **மே ஒன்று.**

1880கள் காலகட்டத்தில் உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்கள் தினமும் 16 மணி நேரம் முதல் 18 மணி நேரம் வரை கட்டாயப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். போதிய உறக்கம் இன்றியும், ஓய்வு இன்றியும், சிந்திக்க முடியாதவர்களாகவும், எப்பொழுதும் வேலை! வேலை!! என அது மட்டுமே சிந்தனையில் இருக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்கள்.

இதை எதிர்த்து 1886 மே 3, 4 தேதிகளில் சிகாகோ நகரில் ஹேமார்க்கெட் என்ற இடத்தில் தொழிலாளர் அமைப்பினர் பெரும் போராட்டம் நடத்தினர். இப்போராட்டத்தில் காவல்துறையினர் துப்பாக்கி சூடு நடத்தினார்கள். இதில் பல தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1889 ஜூலை மாதம் 14ஆம் தேதி உலக தொழிலாளர்கள் அமைப்பு கூட்டம் பாரிஸில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாமேதை காரல் மார்க்ஸ் அவர்கள் கலந்து கொண்டார்கள். காரல் மார்க்ஸ் அவர்கள்தான் தொழிலாளர்களுக்கு 8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் உறக்கம், 8 மணி நேரம் ஓய்வு என்ற கோஷத்தை முன் வைத்து வெற்றியும் பெற்றார்.

1889 ஆம் ஆண்டில், ஹேமார்க்கெட் படுகொலையை நினைவு கூறும் வகையில் சர்வதேச உழைப்பாளர் தினம் மே 1 அன்று கொண்டாடப்படுவது என தீர்மானிக்கப்பட்டது. 1890 முதல் உலகெங்கும் மே 1 உழைப்பாளர் தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்தியாவின் முதன்முதலில் சென்னையில் தான் மே தினம் கொண்டாடப்பட்டது. 1923 ஆம் ஆண்டு மே 1 அன்று பொதுவுடமைவாதி திரு.சிங்காரவேலர் அவர்கள்தான் முதன்முதலில் சென்னை மெரினா கடற்கரையில் மே தின பொதுக்கூட்டத்தை நடத்தினார்.

தொழிலாளர்கள் எவ்வளவு கடுமையாக உழைத்தாலும் அதன் பலன் என்னவோ முதலாளிகளை மட்டுமே சென்றடைகிறது. இதனால் தொழிலாளர்கள் தங்களது உரிமைகளை மீட்டெடுக்க ஒன்று கூடி போராட வேண்டி இருக்கிறது. இதற்காக பலர் உயிர் தியாகம் செய்ய வேண்டி உள்ளது. அப்படிப்பட்ட உழைப்பாளர்களின் தியாகத்தை போற்றவும், அனைத்து தொழிலாளர்களுக்கும் அவர்களின் உரிமைகள் சென்றடையவும் மே 1 அன்று உழைப்பாளர் தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

**விதைத்தவர்கள் உறங்கலாம்! விதைகள் என்றும் உறங்குவதில்லை!**

பொர். **S.** அமர்நாத்
மின்னலை ஆசிரியர் குழு உறுப்பினர்

## KNOW THIS DAY - APRIL 3rd

Today 03.04.2025 is a historical day in the annals of Sangam's history.

30 years ago on 03.04.1995 our Sangam members thronged the Head Quarters at Chennai in huge numbers demanding justice from the Personnel Management for denying their legitimate JE1 / Electrical Promotion.

On 01.04.1995 April fools day, message started to pour in from Chennai that Board is preparing secretly for Direct Recruitment of Assistant Engineer in Electrical and Mechanical disciplines.

It was a shock for our Sangam which kept demanding the promotions of Junior Engineer 1st grade to fill in the huge backlog which was more than 1500 Nos. at that time.

Instead of ordering for our legitimate promotions Board was keen in Direct Recruitment of AEs and was working secretly on it even on holidays. (01.04.1995 and 02.04.1995 were holidays)

It's needless to mention how limited the communication was those days. Despite that, message spread like wildfire on 02.04.1995 / Sunday that Personnel Management is proceeding with AE recruitment denying our legitimate JE1 Promotions and working on it on holidays.

Demanding justice, on 03.04.1995, our Sangam members started pouring in at HQ in huge numbers from all corners. The Main Gate at HQ was closed and our Sangam Office Bearers addressed the gathering on current status and the steps taken.

Yet members weren't convinced and started squeaking in and thronged the 10 floor High Rise Building of the Board including the Chairman Office.

Official works came to standstill and Management were forced to discuss with our Sangam to diffuse the situation. Agitated Sangam Members remained calm and stationed where ever they were sitting in front of the Offices, Corridors, Staircase and everywhere.

During the late evening, marathon talks borne fruits and the assembled members dispersed from the High Rise Building and gathered in front of the Main Gate. The agitated members were kept alive by the Speeches of Office Bearers. The fiery speeches of Sangam Stalwarts beloved Er. MS.Arasan and Er. PE.Sethupathy lifted the spirit and are the one's to be etched in our history.

Later the gathering disbursed once hearing the good news that Board had succumbed to our demand and ready to release our pending legitimate promotions.

As assured Board issued Promotion Orders of JE1 / Electrical the following day on 04.04.1995 well before issuing the Direct Recruitment Orders of Aes.

Justice prevailed, Sangam and its members emerged victorious.

The action didn't stop here.....

Board initiated punitive action on not only our Office Bearers and Members but our Sangam too.

- Sangam's recognition was cancelled and our Sangam Office at HQ was sealed by the Board.
- Key Office Bearers at HQ were shifted outside on transfer.
- Disciplinary Proceedings were initiated against members who participated in the Agitation.

All these punitive actions never slowed us down and we fought valiantly.

- The Hon'ble High Court came to our rescue and Sangam's recognition was restored.
- Yet the affected Office Bearers and Members had to go through all the trauma which inflicted deep wounds in us, some of the sufferings even lasts today.

Relive this historical day - 03.04.1995 yet again even after 30 years.

**Long Live Sangam.**

Er. A. ANTONY PADOVARAJ
President / TNEBES.

## தஞ்சாவூர்

தஞ்சாவூர் கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் **30.03.2025** அன்று **பொர்.G.குமார்,** கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **பொர்.A.அந்தோணி படோவராஜ்,** மாநிலத் தலைவர், **பொர்.R.சுந்தராஜ்,** மாநிலத் துணைத் தலைவர் / மின்னியல், **பொர்.S.சம்பத்,** அமைப்புச் செயலாளர் மற்றும் **பொர்.P.சுந்தர்,** தஞ்சாவூர் மண்டலச் செயலாளர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **Er. G.Kumar**, JE / O&M / Town Madhukkur. Ph. 9443866670 |
| துணைத் தலைவர் | : | **Er. R.Manimaran**, JE / SS / Mariamman Koil, Thanjavur. Ph.9787652088 |
| செயலாளர் | : | **Er. K.Prabakaran,** JE / Lines / Aduthurai, Ph. 9965683648 |
| இணைச் செயலாளர் | : | **Er. S.Ranjithkumar,** AE / Rural / Papanasam. Ph. 9994201915.. |
| அமைப்புச் செயலாளர் | : | **Er. R.Ramkumar**, JEII / SS / Urban Pattukkottai. Ph. 9994541434 |
| பொருளாளர் | : | **Er. S.Surendar**, JE2 / 110 KV SS / Urban Thanjavur. Ph. 9597244251. |
| பொதுக்குழு உறுப்பினர் | : | **Er. R.Sundarraj,** AEE / TT & DC / Thanjavur. Ph. 9443007521,. |
| | | **Er. P.Sundar,** AEE / Shift / 230KV SS / Kumbakonam. Ph. 94438 27103. |

## திருவண்ணாமலை

திருவண்ணாமலை கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் **31.03.2025** அன்று **பொர்.N.சண்முகம்,** கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **பொர்.N.R.செந்தில்,** மாநிலப் பொருளாளர், மற்றும் **பொர்.P.M.மாரியப்பன்,** செயலாளர் தலைமையகம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **Er. B.Nedunchezhiyan**, JE / D/Paramanandal. Ph. 9487684433 |
| துணைத் தலைவர் | : | **Er.N.Thiruvengadam,**JE/110KV SS/Thandrampattu.Ph.94865 37331 |
| செயலாளர் | : | **Er.C.Chandrasekaran**,AEE/O&M/South T.V.Malai. Ph. 9443803221 |
| இணைச் செயலாளர் | : | **Er. A.Prakash,** AE / Spl. Mtce. / T.V.Malai. Ph. 9566679381 |
| அமைப்புச் செயலாளர் | : | **Er. A.Srinivasan,** JE / O&M / Athiyandal. Ph. 7812832162 |
| பொருளாளர் | : | **Er. S.Selvam,** JE / Mtce. / 110 KV SS / Samuthiram. Ph. 9442455904 |
| பொதுக்குழு உறுப்பினர் | : | **Er.V.Ashok Kumar,** JE/ Training Centre/T.V.Malai. Ph. 9443629178 |
| | | **Er.R.Natarajan,** AEE/General/CE Office.T.V.Malai. Ph. 9442414171. |

## ஈரோடு

ஈரோடு கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் **10.04.2025** அன்று **பொர்.D.சீனிவாசன்,** கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **பொர்.A.அந்தோணி படோவராஜ்,** மாநிலத் தலைவர், **பொர்.A.குமரேசன்,** ஈரோடு மண்டலச் செயலாளர் மற்றும் **பொர்.K.சுரேஷ்,** செயலாளர் – நீர்மின் உற்பத்தி மண்டலம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **Er. D.Srinivasan**, AEE /O&M / West Perundurai. Ph. 9443937808 |
| துணைத் தலைவர் | : | **Er.M.Shanmugasundaram,** AEE/O/Sipcot II SS/ Perundurai. Ph. 6380690097 |
| செயலாளர் | : | **Er. E.Thiruneelakandan,** JE/Spl.Mtce / Erode. Ph. 9384948589 |
| இணைச் செயலாளர் | : | **Er. M.Satheesh,** AE / O&M / Town Perundurai. Ph. 9788654881. |
| அமைப்புச் செயலாளர் | : | **Er. D.Suresh,** AE / O&M / East Sivagiri. Ph. 9842038513 |
| பொருளாளர் | : | **Er. K.Krishnan,** JE / O&M / E.K. Valasu. Ph. 9952447272 |
| பொதுக்குழு உறுப்பினர் | : | **Er. K.Suresh**, AEE/O/BKB 2 / Generation Erode. Ph. 9842747889 |

## வேலூர்

வேலூர் கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் 10.04.2025 அன்று **பொர்.S.விநாயகம்** கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **பொர்.V.S.சம்பத்குமார்,** பொதுச் செயலாளர், **பொர்.R.தமிழ்ச்செல்வன்,** சென்னை வடக்கு மண்டலச் செயலாளர் மற்றும் **பொர்.R.தணிகைச்செல்வன்,** வேலூர் மண்டலச் செயலாளர் மற்றும் **பொர்.A.P.ராகேஷ்,** காமதேனு நலநிதி பொருளாளர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **Er. V.Karunamoorthy,** AEE / Shift/Mosur 230KV SS, Ph. 9566569803 |
| துணைத் தலைவர் | : | **Er. R.Sakthivel,** JE / East/Kalavai, Ph. 9080128005 |
| செயலாளர் | : | **Er. S.Vinayagam,** AEE / O&M/Rural Arcot, Ph. 9442745193 |
| இணைச் செயலாளர் | : | **Er. M.Rekha,** JE / O&M/Urban 2 Ranipet, Ph. 9442834248 |
| அமைப்புச் செயலாளர் | : | **Er. M.Saravanakumar,** JE / East /Nemili, Ph. 9884312426 |
| பொருளாளர் | : | **Er. R.Manikandan**, JE / O&M / Bagayam, Ph. 8778954995 |
| பொதுக்குழு உறுப்பினர் | : | **Er. A.Arulsaravanan,** AE/O&M/K.V.Kuppam, Ph. 9025491414, **Er. G.Sudhagar,** JE / O&M / Senji, Ph. 7418465156 |

## கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் **10.04.2025** அன்று **பொர்.A.எழிலரசன்** கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **பொர்.N.R.செந்தில்** மாநிலப் பொருளாளர், **பொர்.C.சந்திரசேகரன்,** திருவண்ணாமலை மண்டலச் செயலாளர் மற்றும் **பொர்.R.சந்தோஷ்குமார்,** காமதேனு நலநிதிச் செயலாளர் மற்றும் **பொர்.V.அசோக்குமார்**, நிர்வாகச் செயலாளர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **Er. A.Ezhilarasan,** JE I Gr./Mtce/230KV Sankarapuram SS, Ph. 8248604614 |
| துணைத் தலைவர் | : | **Er. R.Kirubakaran**, JE/Mtce/110KV SS/Dhevaradiyarkuppam, Ph.**9843532998.** |
| செயலாளர் | : | **Er. B.Syed Musthafa,** AE /Mtce 110KV Thirunavalur SS, Ph. 7871307373 |
| இணைச் செயலாளர் | : | **Er. K.Azhagan,** AE /O&M /Nagalur, Ph. 9787745726 |
| அமைப்புச் செயலாளர் | : | **Er. C.Manikandan,** JE I Gr. /Mtce/765 KV Ariyalur SS, Ph. 9750048849 |
| பொருளாளர் | : | **Er. G.Venkatachalam,** JE I Gr. /O&M/ Manalurpet. Ph. 9655593334. |

# மணந்தனர் வாழ்த்துகிறோம்

மணமகன் வீட்டார்
திரு.**Dr.S.** சம்பத்,
மாநில அமைப்புச் செயலாளர்
த.நா.மி.வ. பொறியாளர் சங்கம்
திருமதி.**S** விமலா
ஆகியோரின் மகன்
**Dr.S. வருண் MBBS., MD., (Anaesthesia)**



மணமகள் வீட்டார்
திரு.**C.** மணிகண்டன்,
திருமதி.**M.** ராஜகோகிலம்
ஆகியோரின் மகள்
**Dr.M. ஸ்ருதி MBBS., MS., (OG)**

**04.04.2025 அன்று இல்லற வாழ்வில் இணைந்த**

**மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

# பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்

கீழ்க்கண்ட பொறியாளர்கள் 31.03.2025 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். அவர்களை பொறியாளர் சங்கம் நீண்ட ஆயுள், நல்ல உடல்நலம், நிறைந்த மனநிம்மதியுடன் வாழ வாழ்த்தி மகிழ்கிறது.

1.**Er. R.MURUGESAN,** AEE/E/C&I / NCTPS II, Former DS/ETPS, NCTPS Branch. 9840821043

2.**Er. R.RAVI,** EE / O&M /Arni, Thiruvannamalai Branch. 9443932740

3.**Er. R.MANNARSAMY CHETTY,** AEE / Town / Oddanchatram, Dindigul Branch. 7010352171

4.**Er. S.RAVICHANDRAN,** AEE / Operation / Sempatty, Dindigul Branch. 94436 75258

5.**Er.S.EZHILVANAN,** AEE/Mtce./400KV SS/Thervoykandigai, Chennai North Br. 9364444366

6.**Er. V.BABU,** AEE / Shift / 230KV SS / Mosur, Vellore Branch. 9443747479

7.**Er. A.MARIYAPPAN,** AEE / E / O&E / NCTPS I, NCTPS Branch. 9442793427

8.**Er. R.DHANALAKSHMI,** AEE / E / MM / MTPS I, MTPS Branch. 99654 52116

9.**Er. A.LAKSHMANAN,** AEE / Shift/230 KV SS/ Kurubarapally, Krishnagiri Branch. 9442255069

10.**Er. P.ELANGO**, AE / TANDELTA / P&C / Coimbatore, Coimbatore Branch. 98429 85243

11.**Er. G.RAVI**, JE I / Shift / 110KV Grid SS / Kallakudi, Trichy Branch. 94451 16750

12.**Er. J.GANESAN,** JE I / O&M / Pennagar, Villupuram Branch. 9080524342

13.**Er. K.RAJAGOPALAN,** JE I / O&M / North Mannargudi, Thiruvarur Branch. 9940902060

14.**Er. P.GUNASEKARAN,** JE I / SS / Virudhachalam, Cuddalore Branch. 9003932260

15. **Er. A.CHANDRASEKARAN,**JE I/O&M/Kandaramanickam, Sivaganga Branch. 9865781452

16.**Er.M.ANANTHA KRISHNAN,** JE I/Mobile 6/C D C, CDC Branch. 9940100049

17.**Er. A.GOVINDARAJU,** JE I / O&M / Kavilipalayam, Gobi Branch. 88839 55129

18.**Er. G.RAJENDRAN,** JE II / 110/11KV SS / Kilpallipet, Vellore Branch. 9363104316

19. **Er.B.SASHISEKARAN,** EE/Elec./ Pushep, Gen. Circle Kundah. Nilagiri Branch.9443858522

## 'பேட்டரி எனர்ஜி ஸ்டோரேஜ்' நிறுவ 'டெண்டர்' கோரியது மின்வாரியம்

தமிழகத்தில், ஒரு மணி நேரத்திற்கு, 1,000 மெகாவாட் பசுமை மின்சாரத்தை சேமித்து, மீண்டும் பயன்படுத்தும், 'பேட்டரி எனர்ஜி ஸ்டோரேஜ்' கட்டமைப்பு பணியை செயல்படுத்தும் திட்டத்திற்கு ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய, மின்வாரியம், 'டெண்டர்' கோரியுள்ளது.

உலகம் முழுதும் சுற்றுச்சூழலை பாதிக்காத காற்றாலை, சூரியசக்தி உள்ளிட்ட பசுமை மின்சார பயன்பாடு அதிகரித்து வருகிறது. தமிழகத்தில், இந்த இருவகை மின்சாரமும் அதிகம் கிடைக்கும் சூழல் நிலவுகிறது. இதனால், பல நிறுவனங்களும் அந்த மின் நிலையங்களை அமைத்து வருகின்றன. தற்போது, பசுமை மின்சாரம் உற்பத்தியான உடனேயே பயன்படுத்தப்படுகிறது. வெளிநாடுகளில் இருப்பது போல, தமிழகத்தில் ஒரு மணி நேரத்திற்கு, 1,000 மெகாவாட் பசுமை மின்சாரத்தை சேமித்து வைத்து, பயன்படுத்தும் பேட்டரி எனர்ஜி ஸ்டோரேஜ் கட்டமைப்பு வசதியை ஏற்படுத்த, மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

துணைமின் நிலையங்களில் காலியாக உள்ள இடங்களில், இத்திட்ட பணிகளை செயல்படுத்தும் ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய, மின் வாரியத்தின் பசுமை எரிசக்தி கழகம் நேற்று, 'டெண்டர்' கோரியுள்ளது.

பி.ஓ.ஓ., திட்டத்தின் கீழ், அதாவது ஒப்பந்த நிறுவனம் தன் சொந்த செலவில், பேட்டரி எனர்ஜி ஸ்டோரேஜ் கட்டமைப்பை அமைத்து, செயல்படுத்த வேண்டும். அந்நிறுவனத்தின் கட்டமைப்பில் மின்சாரத்தை மின்வாரியம் சேமித்து, மீண்டும் பயன்படுத்தும்.

இதற்கு, ஒரு யூனிட்டிற்கு கட்டணம் நிர்ணயித்து வழங்கப்படும். எனவே, குறைந்த கட்டணம் தெரிவிக்கும் நிறுவனத்திற்கு பேட்டரி ஸ்டோரேஜ் கட்டமைப்பு ஏற்படுத்த அனுமதி வழங்கப்படும்.

பேட்டரி எனர்ஜி ஸ்டோரேஜ் கட்டமைப்பு ஏற்படுத்தும் நிறுவனங்களை ஊக்குவிக்க, மத்திய அரசு நிதி உதவி செய்கிறது. தமிழகத்தில், ஒரு மெகாவாட் கட்டமைப்புக்கான மொத்த செலவில், 40 சதவீதம் வரை நிதியுதவி செய்யப்பட உள்ளது.

## தமிழகம் முழுவதும் புதுப்பொலிவு பெறும் மின்வாரிய பிரிவு அலுவலகங்கள்

தமிழகம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும், தலா 10 மின்வாரிய பிரிவு அலுவலகங்களை சீரமைத்து, புதுப்பொலிவு பெறச் செய்ய மின்வாரிய தலைவர் ராதாகிருஷ்ணன் உத்தரவிட்டுள்ளார்.
தமிழகம் முழுவதும் மின்வாரியத்துக்கு 2,850 பிரிவு அலுவலகங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவற்றில் மின்கட்டண வசூல் மையங்களும், துணை மின் நிலையங்களும் உள்ளன. மின்விநியோக பணிகள் பிரிவு அலுவலகங்கள் மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே, சேதம் அடைந்த மின்விநியோகப் பெட்டிகள், கேபிள்கள் உள்ளிட்ட மின்சாதனங்களும், வீடுகளில் இருந்து கழற்றப்படும் குறைபாடு உடைய மீட்டர்கள் உள்ளிட்டவையும் பிரிவு அலுவலகங்களில் குப்பை போன்று குவித்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும், முறையான பராமரிப்பு இல்லாததால் பல அலுவலகங்கள், மின்கட்டண மையங்கள் தூசிபடிந்து கட்டிடங்களில் விரிசல் ஏற்பட்டு சேதம் அடைந்து காணப்படுகின்றன.

இந்நிலையில், மின்வாரிய தலைவர் ராதாகிருஷ்ணன் மின்வாரிய பிரிவு அலுவலகங்களை புதுப்பிக்க உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, மின்வாரிய பிரிவு அலுவலகங்களில் உள்ள பழைய மின்சாதனங்களை அகற்றி, சேதம் அடைந்த பகுதிகளை சீரமைத்து, மின்கட்டண மையம், பிரிவு அலுவலகம், துணை மின் நிலையத்தை புதுப்பொலிவுக்கு மாற்றுமாறு பொறியாளர்களுக்கு ராதாகிருஷ்ணன் உத்தரவிட்டுள்ளார்.

முதல் கட்டமாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 10 அலுவலகங்களை சீரமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. சென்னை, கொட்டிவாக்கம் துணைமின் நிலையத்தை சீரமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பணிகளை 6 மாதங்களுக்குள் முடிக்குமாறு, பொறியாளர்களுக்கு, மின்வாரிய தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

– நன்றி காமதேனு

## அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடக்கூடாது திருத்தப்பட்ட நடத்தை விதிகள் வெளியீடு

சென்னை, மார்ச் 6–மாநில அரசு ஊழியர்களுக்கு 1973ல் உருவாக்கப்பட்ட நடத்தை விதிகளில், தமிழக அரசு திருத்தம் செய்து புதிய விதிகளை வெளியிட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது:

- அரசின் அனுமதியின்றி அரசு ஊழியர்கள், அவர்களின் மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்கள், 25,000 ரூபாய்க்கும் அதிகமான பரிசுகளை பெறக் கூடாது. திருமணம் உள்ளிட்ட மத சடங்குகளின்போது, 25,000 ரூபாய்க்கும் அதிகமான பரிசுகளைப் பெறலாம். இதை ஒரு மாதத்திற்குள் அரசுக்கு தெரிவிக்க வேண்டும்.
- அரசுக்கு எதிரான கருத்துக்களை, அரசு ஊழியர்கள் எந்த வகையிலும் தெரிவிக்கக் கூடாது. அங்கீகரிக்கப்பட்ட அரசு ஊழியர்கள் சங்க பொறுப்பாளர்கள். தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம்.
- ஒரு அரசு ஊழியர், தனக்கான அரசு பணிகளைத்தவிர, எந்தவொரு அலுவல் சாரா கூட்டத்திற்கோ மாநாட்டிற்கோ தலைமை தாங்கவோ, பங்கேற்கவோ கூடாது. அதில் உரையாற்றவும் கூடாது.
- அரசு ஊழியர்கள், எந்தவொரு அரசியல் கட்சி, அமைப்பிலும், உறுப்பினராக இருக்கக் கூடாது. வேறு எந்த வகையிலும் தொடர்பு வைத்திருக்க கூடாது. எந்த அரசியல் கட்சிக்கோ, தேர்தலில் எந்த வேட்பாளருக்கோ ஆதரவாக இருக்கிறார் என்ற சந்தேகம் ஏற்படுவதற்கு இடமளிக்க கூடாது.
- ஒரு அரசு ஊழியரின் குடும்பத்தினர். அரசியல் கட்சி அமைப்புகளில் இருந்தால், அதை அரசுக்கு தெரிவிக்க வேண்டும்.
- தேர்தலில் ஓட்டு போடலாம்; ஆனால். யாருக்காகவும் பிரசாரம் செய்யவோ, வேறு வகைகளில் தலையிடவோ கூடாது.
- அரசுக்கு அவமானத்தை ஏற்படுத்தக்கூடிய எந்த செயலிலும் ஈடுபடக் கூடாது.
- எந்தவொரு அரசு ஊழியரும். வேலை நிறுத்தத்தில் ஈடுபடவோ அல்லது அதற்கான தூண்டுதல்களில் ஈடுபடவோ கூடாது. அனுமதியின்றி வேலைக்கு செல்லாமல் இருப்பது. கடமைகளை புறக்கணிப்பதும், போராட்டமாக கருதப்படும்.
- அனுமதியின்றி, அரசு அலுவலக வளாகத்திலோ, அதையொட்டியோ ஊர்வலம், கூட்டம் நடத்தக் கூடாது. அதில் உரையாற்றவும் கூடாது.
- அரசு ஊழியர்கள் மதச் சார்பற்ற தன்மைக்கு எதிராகவும், சமூகத்தில் ஒற்றுமையை சீர்குலைக்கும் எந்தவொரு செயலிலும் ஈடுபடக்கூடாது. இந்தியாவின் இறையாண்மை, ஒருமைப்பாடு, மாநில பாதுகாப்பு, வெளிநாடுகளுடனான நட்புறவு, பொது ஒழுங்கு, கண்ணியம் ஆகியவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபடக்கூடாது.
- இந்தியாவின் இறையாண்மை, ஒருமைப்பாடு, பொது அமைதிக்கு எதிரான நோக்கங்கள் செயல்பாடுகள் கொண்ட எந்தவொரு சங்கத்திலும் உறுப்பினராக இருக்கக் கூடாது.
- அலுவலகத்திலும், பொது இடங்களுக்கு வரும்போதும் மது அருந்தி விட்டு வரக்கூடாது.
- தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை, எந்த இடத்திலும் தவறாக பயன்படுத்தக்கூடாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

– நன்றி தினமலர்

## 48 / 52 – தமிழக மின் பகிர்மான தரம் இது! 'சி மைனஸ் கிரேடு'க்கு இறங்கியது ஏன்?

சென்னை, பிப். 23–

நாடு முழுவதும் உள்ள, 52 மின் வினியோக நிறுவனங்களின் செயல்திறனை உள்ளடக்கிய தரவரிசை பட்டியலை, மத்திய மின் துறை வெளியிட்டுள்ளது. அதில், தமிழக மின் பகிர்மான கழகம், 'சி மைனஸ் கிரேடு பெற்று, 48வது இடத்தில் உள்ளது.

தமிழகத்தில் வீடு உட்பட அனைத்து பிரிவுகளுக்கும், மின் வினியோகம் செய்யும் பணியை, அரசு நிறுவனமான, மின் பகிர்மான கழகம் மட்டுமே மேற்கொள்கிறது. அதே சமயம், ஆந்திரா, குஜராத் உட்பட பல மாநிலங்களில், இந்த பணியை இரண்டு, மூன்று நிறுவனங்கள் மேற்கொள்கின்றன.

### 12.92 சதவீதமாக அதிகரிப்பு

கடந்த 2023, 24 நிதியாண்டில் நாடு முழுவதும் உள்ள மின் வினியோக நிறுவனங்களின் செயல் திறன் தொடர்பாக, அவற்றின் நிதிநிலைமை, மின் கட்டணம் வசூல், மின் வினியோக செயல்பாட்டை மதிப்பீடு செய்து தரவரிசை பட்டியலை, மத்திய மின்துறை தற்போது வெளியிட்டுள்ளது.

இந்த பட்டியலில், 52 அரசு மற்றும் தனியார் மின் வினியோக நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றின் செயல்திறன் அடிப்படையில் மதிப்பெண் வழங்கி, 'ஏ பிளஸ், ஏ, பி, பி மைனஸ், சி, சி மைனஸ்' போன்ற கிரேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில், தமிழக மின் பகிர்மான கழகம், 11.90 மதிப்பெண்ணுடன், சி மைனஸ் கிரேடு' பெற்று, 48வது இடத்தை பிடித்துள்ளது. இந்நிறுவனம், அதற்கு முந்தைய ஆண்டான, 2022 – 23 பட்டியலில், சி மைனஸ் கிரேடு உடன், 50வது இடத்தில் தரவரிசை பட்டியலில் இருந்தது.

தமிழக மின் பகிர்மான கழகம் மோசமான நிலையில் இருப்பதற்கு, பல காரணங்கள் கூறப்பட்டுள்ளன.

- மின்சாரத்தை ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லும் போது ஏற்படும் மின் இழப்பு, 10.31 சதவீதத்தில் இருந்து, 12.92 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- மின் பயன்பாட்டை கணக்கெடுத்து, பில்லிங்' போடும் திறன், 90.83 சதவீதத்தில் இருந்து, 90.08 சதவீதமாக குறைந்துள்ளது.
- மின் கட்டணம் வசூலிக்கும் நாள், 55ல் இருந்து, 58 நாட்களாக அதிகரித்து உள்ளது
- மின் கொள்முதலுக்கு பணம் வழங்குவது, 170 நாட்களில் இருந்து, 184 நாட்களாக அதிகரித்துள்ளது.
- மின் கட்டணம் வசூலிக்கும் திறன், 98.75 சதவீதத்தில் இருந்து, 96.67 சதவீதமாக குறைந்து உள்ளது.

### 97.20 மதிப்பெண்

அதேசமயம், ஒரு யூனிட் மின்சாரம் விற்பனை வாயிலாக கிடைத்த வருவாய் மற்றும் மின்சார செலவுக்கு இடையிலான இடைவெளி, 89 காசில் இருந்து, 11 காசாக குறைந்துள்ளது.

மத்திய தரவரிசை பட்டியலில், மஹாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள தனியார் துறையைச் சேர்ந்த, 'அதானி எலக்ட்ரிசிட்டி மும்பை நிறுவனம், 99.80 மதிப்பெண்ணுடன், 'ஏ பிளஸ்' கிரேடு பெற்று, முதலிடத்தில் உள்ளது. இதையடுத்து, குஜராத் அரசின், 'தக்ஷின் குஜராத் விஜ் நிறுவனம், 97.50 மதிப்பெண்ணுடன், ஏ பிளஸ் கிரேடு உடன் இரண்டாவது இடத்திலும், உ.பி., 'நொய்டா பவர் கம்பெனி' நிறுவனம், 97.20 மதிப்பெண்ணுடன், ஏ பிளஸ் பெற்று மூன்றாவது இடத்திலும் உள்ளன.

தமிழக மின் பகிர்மான கழகத்திற்கு அடுத்து, 49வது இடத்தில் தெலுங்கானா மாநில அரசின் மின் வினியோக நிறுவனமும், 50வது இடத்தில், உ.பி., அரசின் தக்ஷினான்சல் வித்யுத் விட்ரன் நிகாமும், 51வது இடத்தில், ஜார்க்கண்ட் மாநில அரசின் பிஜிலி விட்ரன் நிகாமும், 52வது இடத்தில் மஹாராஷ்டிரா மாநில அரசின் மின் வினியோக நிறுவனமும் உள்ளன.

## CMD spruces up EB offices, for giving better ambience to public and staff

DC CORRESPONDENT Chennai, MARCH. 26

Senior bureaucrat Dr.J.Radhakrishnan, known for his out-of-the-box innovations, has launched an ambitious project to spruce up dull spaces at all electricity board(EB) offices and sub-stations. Colourful images of various EB activities, from power generation to distribution and public usage, are being drawn to adorn the exteriors of these buildings while the inside walls are getting cleaned and artistically painted. The power installations too are getting a fresh coat of silver painting.

"The idea is to make these model sub-stations appear clean and pleasant to the public and the staff," said Dr.Radhakrishnan, CMD, Tangedco, and chairman, 1 Tamil Nadu Power Generation Corporation Limited.

"Also, the public seem to be concerned only about power at proper voltage being supplied to their homes and establishments; they should be made aware of this very critical infrastructure, the mammoth work that goes on behind the switch-and-light at home. This sprucing up is not just a matter of cosmetic aesthetics but also showcases the service angle also", he said.

He said the EB offices will also have useful information painted on inside walls, such as safety measures, for the visiting public. "If this multiangle approach succeeds, and I have no doubt it will succeed, the model can be replicated in other government offices as well", he said, adding that he might be writing to the district collectors in this regard.

Insisting that the project would not strain the EB budget, he said the 'Information Education Communication Campaign' (IECC) has various schemes with funds available to take positive messages to the public. There are also large CSR funds available for this purpose. The EB substations and other government offices can provide wall spaces for putting out those pleasant paintings and important messages for the people," Dr.Radhakrishnan said.

"We feel really good to work in such a clean and bright office environment. The visiting public too seem happy", said Ms.M.Balasundari, Assistant Engineer at Kottivakkam sub-station.

## உழைப்பாளர் தின வாழ்த்துக்கள்

பொறியாளர் சங்க உறுப்பினர்கள்
அனைவருக்கும் உழைப்பாளர் தின
நல்வாழ்த்துக்களை
பொறியாளர் சங்கம்
தெரிவித்துக்கொள்கிறது



# கண்ணீர் அஞ்சலி

## பொறியாளர்கள்

1. 28.03.2025 **பொர்.M.கண்ணன்**, இளநிலை பொறியாளர்/110 KV/பெரம்பூர் SS, நாகை கிளை அவர்கள்
2. 12.04.2025 **பொர்.T.ராமச்சந்திரன்.**, உதவி செயற்பொறியாளர்/NI/இயந்திரவியல், O&E-2/TTPS, TTPS கிளை அவர்கள்.

பொறியாளர்கள் மறைவிற்கு பொறியாளர் சங்கம் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது. பொறியாளர்களை இழந்து வாடும் குடும்பத்திற்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

## பொறியாளர் குடும்பத்தினர்கள்

1. 27.03.2025 அன்று **பொர்.M.சுஜாதா**, செயற்பொறியாளர்/கரூர் கிராமியம், கரூர் கிளை அவர்களின் **தாயார்.** 9842799490.
2. 27.03.2025 அன்று **பொர்.R.குணசேகரன்**, உதவி செயற்பொறியாளர்/இ.பரா/துறையூர் தெற்கு, திருச்சி கிளை அவர்களின் **தாயார்.** 9047379149.
3. 29.03.2025 அன்று **பொர்.P.வெள்ளைச்சாமி**, இளநிலைப் பொறியாளர்/இ.பரா/துவரங்குறிச்சி திருச்சி கிளை அவர்களின் **தாயார்.** 9443773319.
4. 01.04.2025 அன்று **பொர்.S.பொன்னையன்**, தொழில்நுட்ப உதவியாளர்/இயந்திரவியல்/KGTPS, நாகை கிளை அவர்களின் **தாயார்.** 9659948798.
5. 03.04.2025 அன்று **பொர்.V.பாலசுப்பிரமணியன்**, உதவி செயற்பொறியாளர்/மின்னியல்/முறைப்பணி/ NCTPS-II, NCTPS கிளை அவர்களின் **மனைவி.** 9442191944.
6. 04.04.2025 அன்று **பொர்.N.சரவணன்**, இளநிலைப் பொறியாளர்/குனிச்சி, திருப்பத்தூர் கிளை அவர்களின் **தந்தையார்.** 9585535508
7. 04.04.2025 அன்று **பொர்.S.சத்தியநாதன்**, இளநிலைப் பொறியாளர்/இ.பரா/திருப்பத்தூர். திருப்பத்தூர் கிளை அவர்களின் **தாயார்.** 9445855284
8. 07.04.2025 அன்று **பொர்.R.பிரபு**, உதவி பொறியாளர்/வீரபெருமாநல்லூர், பண்ரூட்டி, கடலூர் கிளை அவர்களின் **தாயார்.** 9751532338
9. 10.04.2025 அன்று **பொர்.A.ஜீனத் பெர்தௌஸ்**, இளமின் பொறியாளர் –II/110KV பழையபேட்டை SS, திருநெல்வேலி கிளை அவர்களின் **தந்தையார்.** 9585535508
10. 15.04.2025 அன்று **பொர்.S.கல்பனாதேவி**, இளமின் பொறியாளர்/Tech Operation/திருநெல்வேலி, திருநெல்வேலி கிளை அவர்களின் **தாயார்.** 9751532338.
11. 16.04.2025 அன்று **பொர்.S.மைதீன்**, இளநிலைப் பொறியாளர்/ VGTPS இராமநாதபுரம் கிளை அவர்களின் **தந்தையார். 9487524440.**

ஆகியோர் இயற்கை எய்தினார்கள். குடும்பத்தினர்களை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.






கள்ளக்குறிச்சி



மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் திருவாரூர் கிளையில் 18.04.2025 அன்று நடந்த பொறுப்பாளர்களுக்கான மேடைப் பேச்சு பயிற்சி (Effective Public Speaking) முகாமை நடத்திய நமது மாநில அமைப்பு செயலாளரும், தேசிய பயிற்சியாளருமான முனைவர் சா.சம்பத் மற்றும் JCS மண்டல பயிற்சியாளர் திரு.ந.மாமலைவாசன் அவர்களுடன் பயிற்சியாளர்கள்.

The head of the Catholic Church and sovereign of the Vatican City, Pope Francis born Jorge Mario Bergoglio breathed his last on 21.04.2025 aged 88 years. The Argentinian was the 1st Pope from Latin America taking charge during the year 2013.

Throughout his public life, Francis was noted for his humility, emphasis on God's mercy, international visibility as pope, concern for the poor, and commitment to interreligious dialogue. In his death the world has lost one of the voices who stood up for the oppressed.

Sangam mourns the death of the Papal and prays for the departed soul.

காஷ்மீர் பஹல்காமில் அப்பாவி சுற்றுலாப் பயணிகள் மீது நடத்தப்பட்ட மனிதாபிமானமற்ற பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்த பொதுமக்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.



சென்னை வடக்கு கிளையின் உறுப்பினர் மறைந்த பொர். M. சண்முகம் / JE அவர்களது காமதேனு நலநிதி பணப்பயன் Rs.3,00,000/- க்கான காசோலை அவரது குடும்பத்தாரிடம் பொறியாளர் சங்கம் சார்பில் 08.04.2025 அன்று சென்னை வடக்கு கிளை சங்க பொறுப்பாளர்கள் மற்றும் மைய பொறுப்பாளர்கள் முன்னிலையில் பொறியாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மற்றும் பொதுப் பொருளாளர் அவர்களால் வழங்கப்பட்டது.

Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079.
Edited by : U.Rajendran, Publication Secretary, TNEB Engineers' Sangam